★ மாயாலோகம் ★

(தெலுங்கு)

மதுரை,

நியூ சினிமாவில்

16-3-46 முதல் நடைபெறுகிறது.

★

மாயாலோகம்

(கதைச் சுருக்கம்)

சம்பரீபுரத்தரசனுக்கு ஏழு மனைவிகள். கடைசி மனைவியின் பெயர் மாணிக்காம்பாள். மூத்த ஆறு மனைவிகளுக்கும் ஆறுபிள்ளைகளிருந்தபோதிலும் அவர்கள் மூடர்கள்.

அபூர்வமாக கர்ப்பமான மாணிக்காம்பாளுக்கு மிக்க சிறப்பாக சீமந்தம் நடக்கிறது. அரசன் தன் குலகுருவோடு அங்கு விஜயம் செய்கிறான். "குலவிளக்கே போன்று ராஜாதி ராஜனாக விளங்கப் போகும் ஆண்மகவைப் பெற்று வீரமாதாவாக விளங்கக் கடவாய்" என்று குலகுருவானவர் மாணிக்காம்பாளை ஆசிர்வதிக்க, அப்படியே 'பாக்கியம்' என்று அரசனும் அந்த ஆசிர்வாதத்தைப் பெறுகிறான். இவைகளை உற்றுக்கேட்ட பெரியராணிக்கு வயிற்றெரிச்சல் உண்டாகிறது.

ஏற்கனவே பொறாமையோடு இருக்கும் பெரியராணிக்கு, அவளுடைய பணிப்பெண் லதிகா, இல்லாததும் பொல்லாததும் சொல்லி அவளைத் தூண்டிவிடுகிறாள். எனவே எப்படியாவது மாணிக்காம்பாளை ஒழித்துவிட வேண்டுமென்று பெரியராணி மற்ற ராணிகளுடன் ஆலோசனை செய்கிறாள்.

மாணிக்காம்பாள் உள்ளன்புடன் சக்களத்தி குமாரர்களுக்கு பலகாரங்கள் பரிமாறிக்கொண்டிருக்கும்பொழுது ஆறு ராணிகளும் அங்கு வந்து இலைகளில் மண்ணைப்போட்டு அங்கு இருக்கும் பாயஸத்தை எடுத்துச் செல்கிறார்கள்.

மாணிக்காம்பாள், பாயஸத்தில் விஷத்தைக் கலந்து தங்களுடைய பிள்ளைகளுக்களித்து அவர்களைக் கொல்ல முயற்சித்தாள் என்று அரசனிடம் கூறுகிறார்கள். அரசன் பீதியடைந்து பாயஸத்தை நாய்க்கு வைக்க, அது இறந்துவிடுகிறது. நீதிநெறி தவறாத மன்னன், மாணிக்காம்பாளை நியாய ஸ்தலத்திற்கு அழைக்கிறான். உண்மையில் குற்றவாளி என்றே நம்பி, மாணிக்காம்பாளை நாடு கடத்தப்பட உத்திரவிடுகிறான் அரசன்.

காட்டில் விடப்பட்ட மாணிக்காம்பாள் இங்கும் அங்கும் அலைந்து ஓரிடத்தில் மூர்ச்சை அடைகிறாள். ஏழை பங்காளனாகிய பரமசிவன் பார்வதி சமேதராய் காக்ஷியளிக்கிறார். பரமசிவனும் பார்வதியும் வேடர்களாக மாறி தங்களுடைய கூட்டத்தில் பூர்ண கர்ப்பவதியான மாணிக்காம்பாளை சேர்த்து ரக்ஷிக்கிறார்கள்.

பத்தாவது மாதத்தில் மாணிக்காம்பாளுக்கு ஓர் ஆண்குழந்தை பிறக்கிறது. அவன் பெயர் சாரபந்திராஜன். துரை பிறந்தானென்ற சந்தோஷத்தால் ஆட்டமாடி, பாட்டுகள் பாடி, ஜனனோத்ஸவத்தைக் கொண்டாடுகிறார்கள் வேடர்கள். பரமசிவன் மூலம், அக்குமாரன் ஸகல வித்தையும் பயின்று நாளொருமேனியும் பொழுதொருவண்ணமாக வளர்கிறான்.

தன்னுடைய பிரியநாயகியின் பிரிவால் அரசன் இளைத்துவிடுகிறான். ஒன்றுக்கும் உதவாத பிள்ளைகள் வெளியன்புள்ள மனைவிகளால் அவனுடைய மனோவியாதியைத் தீர்க்க முடியவில்லை. அவனுடைய மனோவியாதி முற்றி, தேகம் இளைத்து, ராஜயக்ஷ்மியாக மாறுகிறது. இதனால் வியாகூலமும் மிகுந்த பாதையும் படுகிறான் அரசன். படுத்த படுக்கையாக இருக்கும் அரசனுக்கு மாணிக்காம்பாள் பேரில் வெறுப்புண்டாகும்படி செய்கிறாள் பெரியராணி.

புகழ்பெற்ற வைத்திய நிபுணர்கள் அரசன் கட்டியை நிவர்த்திக்க முடியாமல் விழிக்கிறார்கள். விவேகியான ஓர் வைத்திய நிபுணன் ஒருவன், பெண் சுகமறியாத ஓர் யுவனின் மூளைதான் அரசன் கட்டியைப் போக்கத்தகுந்த மருந்தென உரைக்கிறான். எதற்கும் தயாராகிற அரச குமாரர்கள் தாங்கள் கொண்டுவர யத்தனிக்கிறார்கள்.

தன்னை விடாது பூஜித்துவரும் பரமசிவன் மாணிக்காம்பாளுக்கு மன்னனின் நிலைமையை தெரிவிக்கிறார். பதியே தெய்வமாக நினைக்கும் பத்னி மாணிக்காம்பாளுக்கு அச்செய்தி இடிபோல் இருக்கிறது. தகப்பனின் உயிரைக் காப்பாற்றுவதற்காக தன்னுடைய குமாரனை சாரபந்தியை பரமசிவனின் கட்டளைக்கிணங்க அனுப்புகிறாள்.

சம்பரீபுரத் தெருக்களில் மருந்து விற்கும் சாரபந்தியை இளவரசர்கள் அரசனிடம் அழைத்துச் செல்கிறார்கள். தன்னுடைய தலையைப் பிளந்து மூளையை எடுக்கவேண்டுமென்று இளவரசர்கள் அட்டகாசஞ் செய்கையில் சாரபந்தி தானும் ஓர் வைத்தியனென்றும் தன்னுடைய மருந்துகளையும் பரீக்ஷிக்கப்பட பிரார்த்தனை செய்கிறான். அரசன் அதற்கு ஒத்துக்கொள்கிறான். கட்டியைப் போக்க, மருந்து தயாரிக்க சில மருந்து தினுசுகள் தேவையென்றும் அவைகளைத் தருவிக்க அரச குமாரர்களைக் கோரும்பொழுது அவர்கள் விழிக்கிறார்கள். தன்வசமிருக்கும் சிட்கா வைத்தியத்தால் அரசன் பாதை சற்று தணிகிறது. முழு பாதையையும் போக்கி, கட்டியை நிவர்த்திக்க, அரசன் தன்னுடைய இராஜ்யத்தை சன்மானம் செய்ய வேண்டுமென்று சாரபந்தி கேட்க, அரசன் இசைகிறான். இளவரசர்கள், தாங்கள் அம்மருந்தை கொண்டுவருவதாகவும் தங்களுக்கு அந்த இராஜ்யத்தை யளிக்கவேண்டுமென்றும் கோருகிறார்கள். மருந்தைக் கொண்டுவருபவர்களுக்கு ராஜ்யம் உண்டென்று அரசன் அறிவிக்கிறான்.

அம்மருந்து சப்தசமுத்திரங்களுக்கு நடுவில் ஒற்றை ஸ்தம்பத்தின் மேடைமீதிருக்கும் யோஜனகந்தியின் சிகையிலிருக்கிறதென்றும் 40 தினங்களில் அதைக்கொண்டுவரவேண்டுமென்றும் சாரபந்தி உத்திரவிடுகிறான். மூட்டை முடிச்சுகள் கட்டிக்கொண்டு மருந்தை கொண்டுவர இளவரசர்கள் பிரயாணமாகிறார்கள்.

காட்டில் வழிதப்பிய இளவரசர்கள், தாருபுரியில் ஒன்றுசேர்கிறார்கள்.

அறுபத்திநான்கு கலைகளில் தேர்ச்சியடைந்தவள் ரங்கசானி. அரசகுமாரர்கள் ரங்கசானியின் மாளிகை வாயிலையடைய நிபந்தனைகளை உணர்கிறார்கள். அவைகளைக் கணக்கிடாமல், மாயையான கோட்டையில் பிரவேசித்து அந்தனை கஷ்டங்களுக்குள்ளாகிறார்கள். கடைசியில் ரங்கசானியின் பரீக்ஷாவிடுதியை அடைகிறார்கள். ரங்கசானியின் பரீக்ஷைகளுக்கு தயாராகுமாறு இவர்களைக் கோர, மார்பைத் தட்டிக்கொண்டு சவால் கேட்கிறார்கள். முதலில் மாயாகட்டில் மெத்தை, பிறகு மாயா நாற்காலியின்மீது அமருமாறு ரங்கசானி கோருகிறாள். அவர்கள் உட்காரும்பொழுது ரங்கசானி விசையைத் திருப்பிவிட்டு அவர்களை அவமானத்திற்கு உள்ளாக்குகிறாள். இதைப்போல் அவளுடைய மாயாவலையில் சிக்கிக்கொண்டோர் அனேகர்.

குறிப்பிட்ட காலத்தில் அரச குமாரர்கள் வரவில்லை. சாரபந்தி அரசனுக்கு சிசுருஷை செய்கிறான். மருந்தைக் கொண்டுவந்து கொடுத்து ராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அரசன் சாரபந்தியை வேண்டிக்கொள்கிறான். சாரபந்தி பயணமாகிறான்.

கோட்டையில் பிரவேசித்ததுமுதல் சாரபந்தியை உஷாராக கவனித்துவந்த லதிகா, அவன் மாணிக்காம்பாள் குமாரன் என்றே தீர்மானம் செய்கிறாள்.

காட்டில் பிரயாணம் செய்யும் சாரபந்தி தாகமிகுதியால் ஓர் குளத்தில் நீர் அருந்தும்போது ஓர் மனிதக்குரலைக் கேட்கிறான். அதைப் பின்பற்றிச்செல்ல, அங்கே ஓர் அழகிய யுவதி காணப்படு கிறாள். அவள் பெயர் ரத்னகாந்தி, சாரபந்தியை பார்த்ததும் பார்க் காததும் அவள் உள்ளம் பூரிக்கிறது. மருந்தைத்தருகிறேனென்று, ரத்னகாந்தி சாரபந்தியை தன் இருப்பிடத்திற்கழைத்து செல்கிறாள். தன்னுடைய வலையில் போட்டுக்கொள்ள ரத்னகாந்தி பிரயத்தனிக் கிறாள் என்பதையறியாத சாரபந்தி, தகப்பன் பொருட்டு தன்னுடைய காரியத்தில் கண்ணாயிருக்கிறான். இங்கு ரத்னகாந்தியால் போஷிக் கப்பட்ட இராக்ஷஸன் குரலைக் கேட்டவுடனே ரத்னகாந்தி சாரபந்தியை பெண் பூனையாக மாற்றிவிடுகிறாள். தான் தனியாக இருப்பதை தன்னுடைய கருத்தை இராக்ஷஸனுக்கு தெரிவிக்க இராக்ஷஸன் தகுந்த வரனையடையலாமென்றும் அவனுக்கு ஆபத்து வாரதென்றும் உறுதியளிக்க ரத்னகாந்தி சாரபந்தியை ராக்ஷஸனுக்கு காட்டுகிறாள் அவன் இருவர்களையும் ஆசிர்வதிக்கிறான்.

தன் இஷ்டத்தை பூர்த்திசெய்யுமாறு ரத்னகாந்தி வேண்ட சாரபந்தி தன்னுடைய பிரதிக்ஞையை வெளியிட்டு, காரியசித்தியான வுடன் அவளை மனைவியாக ஏற்றுக்கொள்ளத் தடையில்லையென்று உறுதி தருகிறான். அவன் நினைத்த இடம் கொண்டுபோக அவ னுக்கு ஓர் மாயக்குதிரை தருகிறாள் ரத்னகாந்தி.

ஆகாயமார்க்கத்தில் சவாரிசெய்து, யோஜனகந்தியின் அந்தப் புரத்திற்கேகி அவள் தூங்கும்பொழுது அவளுடைய சிகையிலிருந்து மருந்துபரணியை எடுத்துக்கொண்டு போய்விடுகிறான் சாரபந்தி. இதைப் பிறகு உணர்ந்த யோஜனகந்தி, திருடனுக்கு தகுந்த தண் டனை விதிக்க மாயாபல்லக்கில் ஏறிக்கொண்டு சாரபந்தியைத் துரத்து கிறாள். சிவவரப்பிரசாதியான வீரபத்திரன் சாரபந்தியை தன் னுடைய சகோதரனாக உணர்ந்து யோஜனகந்தியை இடைமறித்து

அவனை மணம்புரியுமாறு சொல்ல, யோஜனகந்தி தன்னுடைய கோபத்தை மாற்றி, சாரபந்திக்கு பாரியையாகிறாள். இளவரசர்கள் இருக்குமிடம் வீரபத்திரனால் தெரிந்து தன்னுடைய மாயக்குதிரை யுடன் ரங்கசாணியின் பரீக்ஷா க்ருஹத்தையடைகிறான்.

எல்லோரையும்போல அவனையும் பரீக்ஷிக்க பிரயத்தனிக்கிறாள் ரங்கசாணி. வீரபத்திர வரப்பிரஸாதியான சாரபந்தி அவளுடைய மாயைகளை வெல்லுகிறான். அவள் தன்னுடைய தோல்வியை ஒப்புக்கொண்டு தன்னை மனைவியாக ஏற்றுக்கொள்ளும்படி வேண்ட அவன் நிராகரிக்கிறான். வேறு வழியின்றி ரங்கசாணி தன்னுடைய ஞாபகார்த்தம் அவனுக்கு மாயா கம்பிளியை சன்மானிக்கிறாள். காராகிருகத்திலிருக்கும் இளவரசர்களை சாரபந்தி விடுவித்து தனக் காக ஓர் குறிப்பிட்ட இடத்தில் காத்திருக்குமாறு கேட்டுக்கொள் கிறான். போனபிராணன் திரும்பிவந்ததேபோல் அவர்கள் மாய கம்பிளியின் பேரில் குறிப்பிட்ட இடத்தில் வந்துசேர்கிறார்கள்.

தனக்காக காத்துக்கொண்டிருக்கும் யோஜனகந்தி, ரத்னகந் தியை மாயக்குதிரையின்பேரில் ஏற்றிக்கொண்டு, தன்னுடைய சகோதரர்களைக் கலந்துகொள்கிறான். சாரபந்தியினிடமிருக்கும் மருந்தைப்பார்த்தவுடனே அரசகுமாரர்களுக்கு வயிற்றெரிச்சல் உண் டாகிறது. சாரபந்தி தூங்கும் சமயம் அவனைக்கொன்று மாயக் கம்பிளியின்மீதேறிக்கொண்டு பிரயாணமாகிறார்கள் இளவரசர்கள்.

கொல்லப்பட்ட சாரபந்தியின் கதி என்ன ?

காட்டில் மாணிக்காம்பாளின் கதி என்ன ?

இவ்வளவுக்கும் காரணமான பெரியராணியின் குட்டு வெளியாகிறதா?

கடைசியில் ராஜ்யம் யாருடையது ?

இவைகளை எல்லாம் திரையில் காண்க !

சுபம்.

மாயா லோகம்.

நடிகர்கள்

மாணிக்காம்பாள்	....	கண்ணும்பா
ரத்னகந்தி	....	P. சாந்தகுமாரி
யோஜனகந்தி	....	M. V. ராஜம்மா
ரங்கசானி	....	S. வரலக்ஷிமி
லதிகா	....	T. G. கமலாதேவி
பெரியராணி	....	P. பானுமதி
காம்போஜராஜன்	....	டாக்டர் G. V. சுப்பாராவ்
நவ போஜராஜன்	....	C. S. R. ஆஞ்சநேயலு
சராபந்தி ராஜன்	...	A. நாகேஸ்வர ராவ்
அரச குமாரர்கள்:	லங்கசத்தியம்,	J. ராமாராவ், மஹபிர்
	சிங்ராகூர், B. வரஹாலராஜு,	G. நாராயணராவ்.
பிரம்மய்யமந்திரி	...	டாக்டர் G. V. சீதாபதி
சிவன்	...	வேதாந்தம் ராகவையர்
குலகுரு	...	M. C. ராகவன்
வைத்தியர்கள்	...	G. வீரவெங்கையா லிங்கம் சுப்பாராவ்
ராக்ஷஸன்	...	வை. கிருஷ்ணப்ப

ஸ்டூடியோ: **நியூடோன்.**

டைரேக்ஷன்: **G. ராமப்ரம்மம்.**

நரஸு ரிலீஸ்.

H. S. D. Press, Madura—M.D. 45—18—3—46. 8000 O. S.